**சென்னை–6, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர்(தொஅஈ) பொ அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை : மரு.ஜெ.ராஜமூர்த்தி, M.B.B.S., D.C.H.,**

**ந.க.எண்: 6055/தொஅஈ/அந/1/2018** **நாள்: 29.06.2022.**

பொருள்: அலுவலக நடைமுறை – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.பா.விவேக் பாண்டியன் த/பெ.(அமரர்) திரு.S.V.பாலசுந்தரம், அலுவலக உதவியாளர், தொஅஈ மருந்தகம், திருவல்லிக்கேணி) – கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – **பணி வரன்முறை – ஆணை வழங்கல்** – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்:560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2. அரசாணை (நிலை) எண்:120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:26.06.1995.
3. அரசாணை (நிலை) எண்:42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:12.03.2007.
4. அரசாணை (நிலை) எண்:202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:08.10.2007.
5. அரசாணை (நிலை) எண்:155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:08.10.2007.
6. அரசாணை (நிலை) எண்:48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:26.02.2021.
7. அரசு கடித எண்:8755/ஏடி.2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்(ஏடி 2)துறை, நாள்: 16.03.2021.
8. இவ்வியக்கக பணி நியமன ஆணை ந.க.எண்:6055/தொஅஈ/அந/1/2018, நாள்: 17.06.2019.

*******

சென்னை மண்டலம், திருவல்லிக்கேணி தொஅஈ மருந்தகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போதே 06.04.2017 அன்று காலமான திரு.S.V.பாலசுந்தரம் என்பவரது தற்காலிகப் பணி அலுவலக உதவியாளர் பதவியில் 06.04.1985 முற்பகல் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு, 05.04.1986 பிற்பகல் தகுதிகாண் பருவம் முடித்துள்ளார். இறந்த அரசு ஊழியரின் பிறந்த தேதி 25.02.1964, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 28.02.2024 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரராகிய அவரது மகனுமான திரு.பா.விவேக் பாண்டியன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி வேண்டி, உரிய கால கெடுவுக்குள், உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள, அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016) –ன் படி, சென்னை மண்டலம், திருவல்லிக்கேணி தொஅஈ மருந்தகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து, பணியிடையே 06.04.2017 அன்று, இயற்கை எய்திய திரு.S.V.பாலசுந்தரம் என்பாரின் மகனும் வாரிசுதாரருமாகிய திரு.பா.விவேக் பாண்டியன் (பிறந்த தேதி: 02.11.1992) தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ரூ.19500–62000/– நிலை 8 (Level–8) என்ற சம்பள முறையில் பணி நியமனம் செய்யப்பட்டு, மருத்துவம் மற்றம் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொஅஈ)ல் 20.06.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.பா.விவேக் பாண்டியன் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி, பார்வை 6–ல் காணும் அரசாணையின் படி, அவர் பணியில் இணைந்த நாளான 20.06.2019 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவர் "பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருட கால தகுதிகாண் பருவத்தினை தொடர்ச்சியான மூன்று ஆண்டு கால அவகாசத்திற்குள் வெற்றிகரமாக முடித்திடல் வேண்டும்". மேற்படி காலத்தில் மருத்துவ விதித் தொகுதி தேர்வு மற்றும் பவானி சாகர் சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி (Civil Service Training Institute Bhavanisagar Foundational Training) தேர்ச்சி பெற வேண்டும். இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை இருப்பின், அதை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ஓம்/–ஜெ.ராஜமூர்த்தி
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்
இயக்குநர்(தொஅஈ)பொ

பெறுநர்:

திரு.பா.விவேக் பாண்டியன்,
இளநிலை உதவியாளர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்(தொஅஈ),
சென்னை–600 006.

நகல்:

1. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை–06.
2. இவ்வியக்கக நிர்வாகப் பிரிவு–2
3. இருப்புக் கோப்பு / உபரி.

//உண்மை நகல்//அனுப்பப்படுகிறது//

07/7/2022
நிர்வாக அலுவலர்(தொஅஈ)
7/7/22
07/07/2022